பெறுநர். 17.10.2017

தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மான கழகம்,
சென்னை – 2

ஐயா,

பொருள் : விடுபட்டுப்போன ஒப்பந்தத் தொழிலாளர்கள் - மின்வாரியத்தில் நிரந்தரப்படுத்திட வேண்டுவது தொடர்பாக.

பார்வை : வாரிய உத்திரவு எண். 9, நாள் 09.01.2008.

10.08.2007 அன்று மின்வாரியத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையே தொழிற்தகராறு சட்டம் பிரிவு 12(3)-ன் கீழ் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில், தொடர்ந்து கருணைத்தொகை பெற்று வந்த 21,600 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பட்டியல் தயாரிக்கப்பட்டு வாரியஉத்திரவு எண்.44, நாள் 6.9.2007-ன்படி படிப்படியாக நிரந்தரம் செய்யப்பட்டார்கள்.

நிரந்தரம் செய்வதற்காக தயாரிக்கப்பட்ட மேற்கண்ட பட்டியலில் இடம் பெறத் தவறியவர்களின் முறையீட்டினை பரிசீலித்து அவர்களுக்கும் நிரந்தரம் வழங்கிட வாரிய உத்திரவு எண். 9, நாள் 09.01.2008-ன்படி உயர் அலுவலர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

குழுவின் பரிசீலனைக்கு கீழ்கண்ட குறிப்புகள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது.

1) சில ஆண்டுகள் கருணைத்தொகை வழங்கப்பட்டு, பின்னர் வழங்காமலிருந்து: பின்னர் 2005-06-ல் கருணைத்தொகை வழங்கப்பட்டவர்கள்.
2) 6.1.98-க்கு முன்னர் ஒப்பந்தத் தொழிலாளர்களாக பணியில் அமர்த்தப் பட்டாலும் கருணைத்தொகைக்கு வழங்கிய அனுமதிப்பட்டியலில் இடம் பெறத் தவறியவர்கள்
3) 5.1.98-க்குப் பிறகு ஒப்பந்தத் தொழிலாளர்களாக பணியில் அமர்த்தப் பட்டவர்களுக்கு கருணைத்தொகை வழங்குவது மற்றும் நிரந்தரம் செய்வது.
4) கருணைத்தொகை பெறாவிட்டாலும், தொழிலாளர் ஆய்வர் நிரந்தரம் வழங்கிட உத்திவிட்டப்பட்டியலில் இடம் பெற்றவர்கள்.

மேற்கண்ட நிபந்தனைகளை திருப்தி செய்து நிரந்தரம் பெறத் தகுதி பெற்றவர்கள் கூட ஆண்டுகள் 8 ஆகியும் இன்னும் நிரந்தரம் பெறாமல் சுமார் 4 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்கள் அவதிக்குள்ளாயுள்ளனர்.

எடுத்துக்காட்டாக திருவாளர்கள். ராஜா, P.சகாய ராஜா, மற்றும் G.முருகதாஸ். ஆகியோர் வேலூர் வட்டத்தில் 1991 முதல் 2000 ஆண்டுவரை ஒப்பநதத் தொழிலாளர்களாக பணிபுரிந்து 8.8.1998-ல் அடையாளம் காணப்பட்டனர். அதன் பின்னர் தொடர்ந்து 5 ஆண்டுகள் கருணைத்தொகை பெற்றுள்ளனர்.

மேலும் இவர்கள் தொழிலாளர் ஆய்வாளர், வேலூர் அவர்களிடத்தில் பணி நிரந்தம் கோரி வழக்கு பதிந்து ப.மு.எண்.1801/ 2005 நாள். 27.09.2005 மூலம் தீர்ப்பு பெற்றுள்ளனர். வாரியம் இந்த உத்திரவின் பேரில் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுத்த W.P.No.16034/2007 வழக்கானது 7.4.2011-ல் இவர்களுக்கு சாதகமாக வந்துள்ளது. ( Contract labour will be entitled to all the benefits and as confirmed by the division bench and the board is directed to implement)

தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு அவர்கள் குறிப்பாணை. நாள். 20.02.2008-ன்படி (1) 8.7.2007-க்கு முன்பாக தொழிலாளர் ஆய்வாளர் உத்திரவு பெற்றிருந்தாலோ, (2)

8.8.1998-ல் அடையாளம் காணப்பட்டவராக இருந்தாலோ தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்தத் தொழிலாளராக பணியமர்த்திக்கொள்ளலாம் என்ற உத்திரவை வேலூர் வட்ட நிர்வாகம் கடைபிடிக்கவில்லை.

தொழிலாளர் ஆய்வர் உத்திரவுப்படி திருவாளர்கள் G.முருகதாஸ், P.சகாயராஜ் மற்றும் S.ராஜா ஆகியோரை நிரந்தரப்படுத்திட வேண்டும் என்றும் நவம்பர் 2011-ல் சென்னை உயர்நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது.

பின்னர் தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு அவர்களின் க.எண்.015633/145/ஜி65/ஜி652/2017. நாள் 23.02.2017-ன்படி வேலூர் மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கு விவர அறிக்கை கோரப்பட்டது. இந்த கடிதத்திற்குப் பதிலாக மேற்பார்வை பொறியாளர் வேலூர் அவர்கள் க.எண்.004400/ 149/ மே.பொ. / வே.மி.ப.வ. / நிபி-3 நிமே/ 2017 நாள். 30.03.2017-ல் தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு அவர்களின் கு.ஆ.நாள் 20.02.2008-ன்படி திருவாளர்கள் G.முருகதாஸ், P.சகாயராஜ் மற்றும் S.ராஜா ஆகியோர் தகுதியானவர்கள் என்றும் ரூ.250- தினக்கூலி அடிப்படையில் பணியில் அமர்த்திக்கொள்ள பரிந்துரை செய்து தங்களின் அனுமதி வேண்டியுள்ளார்.

எனவே தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு அவர்கள் இதில் தனிக்கவனம் செலுத்தி, கோப்புகளை ஆய்வு செய்து வாரிய உத்திரவுபடி தகுதி பெற்ற ஒப்பந்தத் தொழிலாளர்களை மின்வாரியத் தொழிலாளர்களாகப் பணியில் அமர்த்திட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்